1986 மே 3]

குமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை.

616 — (*வினா எண். 3663) — டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் மாற்று இடம் தேர்ந்தெடுத்து மூலிகைப் பண்ணை அமைக்க தமிழ்நாடு மூலிகைச் செடி பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 9-30)

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்க மூலிகைப் பண்ணையில் சிறியாநங்கை மூலிகைச் செடி வளர்க்கப்படுகின்றதா? பாம்பு கடித்தால் இந்த சிறியாநங்கை மூலிகையைச் சாப்பிட்டால் உயிர் பெற்று விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. உயிர் பெறுகிறார்கள். எனவே, ஒவ்வொரு வீட்டிலும் இந்த சிறியாநங்கை மூலிகைச் செடியை வளர்க்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா? அதற்கு மானியத் தொகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.